# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 23/மா/2026
நாள் 25.05.2026

S. அன்பழகன்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவரின் 17.12.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 18.12.2025 அன்று பெறப்பட்டு 23/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவர் தனது 17.12.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியை மீறி உலகளந்தார் மாட வீதியில் உலகளந்தார் பெருமாள் கோவிலிலிருந்து 150 மீட்டர் தூரத்திலும், காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலிருந்து 350 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலிருந்து 400 மீட்டர் தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் விதியை மீறி சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இடித்து அகற்றுமாறு நான் 08.10.2025 இல் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் அனுப்பி அதனை அவர் 13.10.2025 ல் பெற்று கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குனருக்கு அனுப்பி அவர்களிடமிருந்தும் ஒப்புகை சான்று வந்துள்ளது. (இத்துடன் மாநகராட்சி ஆணையருக்கு 8.10.2025 இல் அனுப்பிய புகாரின் நகல் இணைக்கப்படுகிறது.)

நான் ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே அரசாணை எண் 139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANICIENT MONUMENTS AND

ARCHEOLOGICAL SITES AND REMAINS ACT 1958–இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி உலகளந்தார் பெருமாள் கோவில், காமாட்சி அம்மன் கோவில், முக்தேஸ்வரர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில் ஆகிய கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் ஆகும். ஆனால் $^1/_2$ கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் நான்கு பழமை வாய்ந்த கோவில்களுக்கு இடையில் $^1/_2$ கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் விதி மீறி ஸ்ரீ அருணாமஹால் & அருணா ரெசிடென்சி கட்டி இருப்பது மிகப்பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளதோ என்கிற எனது சந்தேகத்தை தெரிவித்திருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நிர்வாக இயக்குனரின் அறிவுறுத்தல்களை ஆணையர்கள் பின்பற்றாத காரணத்தால் தான் விதிமீறி ஸ்ரீ அருணா மஹால் & அருணா ரெசிடென்சி பல வருடங்களாக செயல்பட்டு வருவதாகவும், உரிய நேரத்தில் மாநகராட்சி அதிகாரிகள் இந்த கட்டிடத்தை ஆய்வு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன். மேலும் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி இதுபோல் விதி மீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்கில் விதிகளை மீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்த திருச்சி மாநகராட்சி ஆணையரை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையும் சுட்டி காட்டியதோடு, விதி மீறி கட்டப்பட்டுள்ள திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் விதி மீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்த திருச்சி மாநகராட்சி ஆணையர் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசுக்கு மாண்புமிகு உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதையும் நினைவூட்டியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே பொது மக்கள் கொடுக்கும் புகார் மனுக்களுக்கு நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்த I.A.S. ஆபிசருக்கு 1 மாதம் சிறை தண்டனையுடன் அபராதமும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதித்ததை ஆணையருக்கு குறிப்பாக சுட்டி காட்ட விரும்புவதாக குறிப்பிட்டதோடு, மாண்புமிகு உயர்நீதி மன்றம் ADGP கைது வழக்கில் சட்டத்தை மீறினால் என்ன நடக்கும் என்பதை அனைத்து பொது ஊழியர்களும் அறியும் வண்ணம் இந்த செய்தியை வெளியிடுமாறு கூறியதோடு, அதிகாரிகள் அரசியல் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கியதை ஆணையருக்கு சுட்டி காட்ட விரும்புவதாக குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே விதிமீறல் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காத சென்னை மாநகராட்சி ஆணையர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரிய வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதி மீறல் தொடர்பான நீதிமன்ற உத்தரவுகளை அதிகாரிகள் மிகுந்த கவனத்துடன், எச்சரிக்கையுடன் கையாள வேண்டும் என்று அறிவுரை வழங்கி உள்ளதை ஆணையரின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் என்று கூறி இருந்தேன்.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அனுமதியின்றி செயல்படும் கட்டிடங்கள் மீது தேவையான நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து (உச்சநீதிமன்ற உத்தரவு எண் 12199–12200 நாள் 30.04.2025) Roc No.3555/2025/TP3 நாள் 15.5.2025 கடிதம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் கடிதம் அனுப்பி உள்ளதை ஆணையரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் விதியை மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்தை இட நேராய்வு செய்து வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்பதையும், கட்டிட நிறைவுச் சான்று அந்த கட்டிடத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் அந்த கட்டித்தை இடித்து அகற்றுமாறு கேட்டுக் கொண்டதோடு, தலைமை செயலாளர் அனுப்பிய சுற்றறிக்கையின்படி 30 நாட்களுக்குள் என் புகார் மீது நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தை தெரிவிக்காவிட்டால், மாண்புமிகு உயர்நீதிமன்றம், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வேன் என்பதை தெரிவிப்பதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே உச்சநீதிமன்ற, உயர்நீதி மன்ற தீர்ப்புகளை சுட்டி காட்டியதோடு 30 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் மாண்புமிகு உச்சநீதி மன்றம், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதாக கூறி இருந்தும் இதுவரை மாநகராட்சி ஆணையர் என் புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதை பார்த்தால் விதிமீறிய ஸ்ரீ அருணா மஹால் & அருணா ரெசிடென்சி நிர்வாகியிடம் லஞ்சம் பெற்றுள்ளாரோ என்கிற வழுவான சந்தேகம் எழுகின்றது.

எனவே இத்தகைய சூழ்நிலையில் குற்றவாளியும், நீதிபதியும் ஒருவராக இருக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டு, பொது மக்களுக்கு நீதி வழங்குவதில் தமிழக மக்களின் காவல் தெய்வமாக திகழும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் போல் நேர்மையாக நீதி வழங்கும் தாங்கள் காஞ்சிபுரத்தில் விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்தை நேரடியாக இட நேராய்வு செய்து, விதி மீறிய கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு பணிவோடு கேட்டுக் கொள்வதோடு விதி மீறிய ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்திற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்டுமாறு மீண்டும் தங்களை பணிவோடு, தாழ்மையுடன் கீழ்படிந்து வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 04.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 7127/2026/எப்1, நாள் 23.02.2026 மற்றும் 09.04.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்.

<u>23.02.2026 நாளிட்ட அறிக்கை</u>

''காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண் 17, உலகளந்தார் மாட வீதியில் உள்ள தங்கும் விடுதியுடன் கூடிய திருமண மண்டபம் பார்வையிடப்பட்டது. மேற்படி இடத்தில் சுமார்15 ஆண்டுகளுக்கு முன்னதாக 42 மீ X 20 மீ மற்றும் 7 மீ X 4 மீ நீள அகலத்தில் அமைந்துள்ள தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளம் வணிக பயன்பாடு R.C.C கட்டிடம் மற்றும் ஐந்தாம் தளம் A.C.C Sheet–வுடன் புராதன நகர உயர கட்டுப்பாட்டு விதிகளை மீறி வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம்–1971, பிரிவு 56 மற்றும் 57, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019இன் கீழ் கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்களை சமர்ப்பிக்க கோரும் அறிவிப்பு 19.12.2025 அன்று வழங்கப்பட்டது. இருப்பினும் கட்டிட உரிமையாளர் இதுநாள் வரை எவ்வித ஆவணங்களையோ, விளக்கமோ மாநகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை.

மேற்படி கட்டிடம் அனுமதியற்ற கட்டுமானம் என முடிவு செய்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 133 (5) மற்றும் 135(1) பிரிவின் கீழ் 24.12.2025 அன்று அனுமதியற்ற கட்டுமானத்திற்கான அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்த அறிவிப்பு கடிதம் சார்வு செய்ய சென்ற போது கட்டிட உரிமையாளர் திரு.சங்கர்தாஸ் என்பவர் உடல் நிலை சரியில்லாததால் மருத்துவமனைக்கு சென்றுள்ளார் என 13.01.2026 அன்று அறிவிப்பு வாங்கியிலாது என கூறி சார்வு செய்ய சென்ற அலுவலரை திருப்பி அனுப்பி விட்டனர். மேலும் 03.02.2026 அன்று மீண்டும் சார்வு செய்ய சென்ற போது அவர் மருத்துவமனையில் இருந்து இன்னும் வரவில்லை என கூறி அறிவிப்பு கடிதம் வாங்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டனர். எனவே கட்டிட உரிமையாளருக்கு இருமுறை நேரில் சார்வு செய்தும் கட்டிட உரிமையாளரின் உடல்நிலை சரியின்மை காரணமாக கூறி உறவினர்கள் வாங்க மறுத்ததால் 21.02.2026 அன்ற பதிவு தபால் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998ன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கு ஆவணங்கள் கோரும் அறிவிப்பு மற்றும் அனுமதியற்ற கட்டிடத்தின் மீது வழங்கப்பட்ட அறிவிப்பு நகல்கள் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

<u>09.04.2026 நாளிட்ட அறிக்கை</u>

''காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண் 15, உலகளந்தார் மாட தெருவில் உள்ள தங்கும் விடுதியுடன் கூடிய திருமண மண்டபம் பார்வையிடப்பட்டது. மேற்படி இடத்தில் சுமார்15 ஆண்டுகளுக்கு முன்னதாக 42 மீ X 20 மீ மற்றும் 7 மீ X 4 மீ நீள அகலத்தில் தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளம் வணிக பயன்பாடு R.C.C கட்டிடம் மற்றும் ஐந்தாம் தளம் A.C.C Sheet–வுடன் புராதன நகர உயர கட்டுப்பாட்டு விதிகளை மீறி வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம்–1971, பிரிவு 56 மற்றும் 57 தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019இன் கீழ் கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்களை சமர்ப்பிக்க கோரும் அறிவிப்பு 19.12.2025 அன்று வழங்கப்பட்டது. இருப்பினும் கட்டிட உரிமையாளர் எவ்வித ஆவணங்களையோ, விளக்கமோ மாநகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை.

மேற்படி கட்டிடம் அனுமதியற்ற கட்டுமானம் என முடிவு செய்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 133 (5) மற்றும் 135(1) பிரிவின் கீழ் 24.12.2025 அன்று அனுமதியற்ற கட்டுமானத்திற்கான அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்த அறிவிப்பு கடிதம் சார்வு செய்ய சென்ற போது கட்டிட உரிமையாளர் திரு.சங்கர் தாஸ் என்பவர் உடல் நிலை சரியில்லாததால் மருத்துவமனைக்கு சென்றுள்ளார் என 13.01.2026 அன்று அறிவிப்பு வழங்க இயலாது என கூறி சார்வு செய்ய சென்ற அலுவலரை திருப்பி அனுப்பி விட்டனர். எனவே கட்டிட உரிமையாளருக்கு முறையே அறிவிப்பு நேரில் சார்வு செய்தும் கட்டிட உரிமையாளரின் உடல்நிலை சரியின்மை காரணமாக கூறி உறவினர்கள் வாங்க மறுத்ததால் 21.02.2026 அன்று பதிவு தபால் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனையும் வாங்க மறுத்து திருப்பி அனுப்பி வைத்தனர். மேற்படி 10.03.2026 அன்று அறிவிப்பை ஒட்ட நடவடிக்கை எடுத்ததால் அறிவிப்பை பெற்றுக் கொண்டனர். ஆனால் கட்டிட உரிமையாளரால் அதற்கான எவ்வித விளக்கமும் அளிக்கப்படாததால், 25.03.2026 அன்று, ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவிப்பினை உறுதி செய்து இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் கட்டிட உரிமையாளருக்கு இறுதி அறிவிப்பில் 7 தினங்களுக்குள் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தெரிவிக்கப்பட்டது. தவறும்

பட்சத்தில் சட்டப் பிரிவு 180–ன் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்து குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என இறுதியாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இதுநாள் வரை எவ்வித விளக்கமோ அல்லது இணையதளம் வாயிலாக கட்டிட வரைபட அனுமதி கோரியோ விண்ணப்பிக்கவில்லை. எனவே இவ்வலுவலக குற்றப்பத்திரிக்கை எண்.P.R.No.8/Zone1/2026, நாள் 08.04.2026–ன்படி காஞ்சிபுரம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ல் பிரிவு 135 (1) (2)(6) r/w 180–ன் கீழ் கட்டிட உரிமையாளர் மீது குற்றசாட்டு பதிவு செய்து நீதிமன்றத்தில் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள குற்றப்பத்திரிக்கை தயார் செய்து மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57 தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 இன் கீழ் அனுமதியற்ற கட்டிடத்தினை மூடி முத்திரையிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்கிற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 10.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியை மீறி உலகளந்தார் மாட வீதியில் உலகளந்தார் பெருமாள் கோவிலிலிருந்து 150 மீட்டர் தூரத்திலும், காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலிலிருந்து 350 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலிருந்து 400 மீட்டர் தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் விதியை மீறி சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால், அருணா ரெசிடென்சி கட்டித்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இடித்து அகற்றுமாறு நான் 08.10.2025 இல் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் அளிக்கப்பட்டது.

நான் ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே அரசாணை எண் 139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANICIENT MONUMENTS AND ARCHEOLOGICAL SITES AND REMAINS ACT 1958–இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி உலகளந்தார் பெருமாள் கோவில், காமாட்சி அம்மன் கோவில், முக்தேஸ்வரர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில் ஆகிய கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் ஆகும். ஆனால் விதி மீறி ஸ்ரீஅருணாமகால் மற்றும் அருணா ரெசிடென்சி கட்டிடம் கட்டியிருப்பது மிகப்பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளது என்று சந்தேகிக்கிறேன்.

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி இதுபோல் விதி மீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்கில் விதிகளை மீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்த திருச்சி மாநகராட்சி ஆணையரை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையும் சுட்டி காட்டியதோடு, விதி மீறி

கட்டப்பட்டுள்ள திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் விதி மீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்த திருச்சி மாநகராட்சி ஆணையர் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசுக்கு மாண்புமிகு உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதையும் நினைவூட்டியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் விதியை மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்தை இட நேராய்வு செய்து வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா என்பதையும், கட்டிட நிறைவுச் சான்று அந்த கட்டிடத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் அந்த கட்டித்தை இடித்து அகற்றுமாறு கேட்டுக் கொண்டதோடு, மாண்புமிகு உயர்நீதிமன்றம், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வேன் என்பதை தெரிவிப்பதாக குறிப்பிட்டிருந்தேன்.

எனவே, காஞ்சிபுரத்தில் விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்தை நேரடியாக இட நேராய்வு செய்து, விதி மீறிய கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு பணிவோடு கேட்டுக் கொள்வதோடு விதி மீறிய ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்திற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளேன் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

**6.** எதிர்மனுதாரர் தரப்பில் காஞ்சிபுரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர் (திட்டம்) **10.04.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''காஞ்சிபுரம் மாநகராட்சியில் உள்ள உலகளந்தார் மாடவீதியில் அமைந்துள்ள கதவு எண்.15ல் தங்கும் விடுதியுடன் கூடிய திருமண மண்டபம் பார்வையிடப்பட்டதில், மேற்படி சுமார்15 ஆண்டுகளுக்கு முன்னதாக 42 மீ X 20 மீ மற்றும் 7 மீ X 4 மீ நீள அகலத்தில் அமைந்துள்ள தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளம் வணிக பயன்பாடு R.C.C கட்டிடம் மற்றும் ஐந்தாம் தளம் A.C.C Sheet–ன் புராதன நகர உயர கட்டுப்பாட்டு விதிகளை மீறி வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதனால் கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019ன் கீழ் கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி அறிவிப்பு 19.12.2025 அன்று வழங்கப்பட்டது. இந்நாள் வரை கட்டிட உரிமையாளர் எவ்வித ஆவணங்களையோ, விளக்கமோ மாநகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை.

மேற்கண்ட கட்டிடம் அனுமதியற்ற கட்டுமானம் என முடிவு செய்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 133 (5) மற்றும் 135/1 பிரிவின் கீழ் இவ்வலுவலக அறிவிப்பு எண். 65/2025 நாள் 24.12.2025 அன்று அறிவிப்பு கடிதம் சார்வு செய்ய சென்ற நிலையில் கட்டிட உரிமையாளர் திரு.சங்கர்தாஸ் என்பவர் உடல் நிலை சரியில்லாத காரணத்தை தெரிவித்து வாங்க இயலாது என்று மாநகராட்சி அலுவலரை திருப்பி அனுப்பிவிட்டார். மீண்டும் 13.01.2026 மற்றும் 03.02.2026 அன்று சார்வு செய்ய சென்ற அலுவலரை அவர் இன்னும் மருத்துவமனையில் இருந்து வரவில்லை என

கூறி அறிவிப்பு கடிதம் வாங்க மறுத்துவிட்டார். பின்பு 10.03.2026 அன்று அறிவிப்பை அவரது உறவினர்கள் பெற்றுக் கொண்டனர். எவ்வித விளக்கமோ அல்லது இணையதளம் வாயிலாக கட்டிட வரைப்பட அனுமதி கோரியோ விண்ணப்பிக்காததால் 25.03.2026 அன்று இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது.

இது நாள் வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவோ கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவில்லை. எனவே, குற்றப்பத்திரிக்கை எண்.P.R.No.8/Zone 1/2026, நாள் 08.04.2026–ன்படி கட்டிட உரிமையாளர் மீது, காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நடுவர் நீதி மன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ல் பிரிவு 135 (1) (2)(6) R/W 180–ன் கீழ் குற்றசாட்டு பதிவு செய்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முமறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட அறிவிப்பு நகல்கள் மற்றும் குற்றப்பத்திரிக்கை நகல் ஆகியவை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.''

7. மனுதாரரின் முறையீட்டு மனு, நேரடியாக அளித்த வாக்குமூலம், எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

> தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என அரசாணை எண் 139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.05.2002 மற்றும் காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANICIENT MONUMENTS AND ARCHEOLOGICAL SITES AND REMAINS ACT, 1958–இல் அறிவிப்பு உள்ள விதியை மீறி உலகளந்தார் மாட வீதியில் உலகளந்தார் பெருமாள் கோவிலிலிருந்து 150 மீட்டர் தூரத்திலும், காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலிலிருந்து 350 மீட்டர் தூரத்திலும், முக்தேஸ்வரர் கோவிலிருந்து 400 மீட்டர் தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டித்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இடித்து அகற்றுமாறு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், காஞ்சிபுரத்தில் இவ்வாறு விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடத்தை நேரடியாக இட நேராய்வு செய்து, விதி மீறிய கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்படி இடித்து அகற்றுமாறும், இவ்வாறு விதி மீறிய ஸ்ரீஅருணா மஹால் & அருணா ரெசிடென்சி கட்டிடம் கட்டப்பட்டதிற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் உள்ள உலகளந்தார் மாடவீதியில் அமைந்துள்ள கதவு எண்.15ல் தங்கும் விடுதியுடன் கூடிய திருமண மண்டபம் பார்வையிடப்பட்டதில், மேற்படி இடத்தில் சுமார்15 ஆண்டுகளுக்கு முன்னதாக 42 மீ X 20 மீ மற்றும் 7 மீ X 4 மீ நீள அகலத்தில் தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம்

தளம் வணிக பயன்பாடு R.C.C கட்டிடம் மற்றும் ஐந்தாம் தளம் A.C.C Sheet–ன் புராதன நகர உயர கட்டுப்பாட்டு விதிகளை மீறி வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதனால் கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019ன் கீழ் கட்டிட அனுமதி பெற்ற ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி அறிவிப்பு 19.12.2025 அன்று வழங்கப்பட்டது என்பதும், இந்நாள் வரை கட்டிட உரிமையாளர் எவ்வித ஆவணங்களையோ, விளக்கமோ மாநகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை என்பதும், மேற்கண்ட கட்டிடம் அனுமதியற்ற கட்டுமானம் என முடிவு செய்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022), பிரிவு 133 (5) மற்றும் 135(1)–ன் கீழ் இவ்வலுவலக அறிவிப்பு எண். 65/2025–24.12.2025, 13.01.2026 மற்றும் 03.02.2026 ஆகிய நாளிட்ட அறிவிப்பு கடிதங்களை மாநகராட்சியால் சார்வு செய்ததை, மேற்கண்ட கட்டிட உரிமையாளர் திரு.சங்கர்தாஸ் என்பவர் மருத்துவமனையில் இருப்பதாக தெரிவித்து யாரும் வாங்கவில்லை என்பதும், பின்பு 10.03.2026 அன்று மாநகராட்சியின் அறிவிப்பை அவரது உறவினர்கள் பெற்றுக் கொண்டனர் என்பதும், இதுவரை எவ்வித விளக்கமோ அல்லது இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவோ அல்லது கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவில்லை என்பதும், எனவே, குற்றப்பத்திரிக்கை எண்.R.No.8/Zone1/2026, நாள் 08.04.2026–ன்படி கட்டிட உரிமையாளர் மீது, காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நடுவர் நீதி மன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998ல் பிரிவு 135 (1) (2)(6) r/w 180–ன் கீழ் குற்றசாட்டு பதிவு செய்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளரின் (திட்டம்)–ன் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், காஞ்சிபுரம் மாநகராட்சியில் உள்ள உலகளந்தார் மாடவீதியில் அமைந்துள்ள கதவு எண்.15ல் தங்கும் விடுதியுடன் கூடிய திருமண மண்டபம் பார்வையிடப்பட்டதில், மேற்படி சுமார்15 ஆண்டுகளுக்கு முன்னதாக 42 மீ X 20 மீ மற்றும் 7 மீ X 4 மீ நீள அகலத்தில் அமைந்துள்ள தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளம் வணிக பயன்பாடு R.C.C கட்டிடம் மற்றும் ஐந்தாம் தளம் A.C.C Sheet–ன் புராதன நகர உயர கட்டுப்பாட்டு விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள வணிக கட்டிடமாக இயங்குவதால், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022), பிரிவு 135 (1)–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டும் அதன்படி மேற்கண்ட கட்டிட உரிமையாளர் உரிய நடவடிக்கை எடுக்காததால், அக்கட்டிட உரிமையாளர் மீது காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ல் பிரிவு 135(1) (2) (6) r/w 180–ன்கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர்களின் (திட்டம்) வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் சூழ்நிலையில், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது கருத்தில் கொள்ளப்பட்டது.

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. அன்பழகன்,
155, அசோக்நகர், முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.

(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.